## பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம்!

# மக்கள் நினைப்பதையெல்லாம் திட்டங்களாக நிறைவேற்றி வரும் முதல்வர்!

## உத்திரமேரூரில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**காஞ்சிபுரம், ஏப்.15-**

**பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உருவாக்கி சாதனை படைத்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மக்கள் நினைப்பதையெல்லாம் திட்டங்களாக தீட்டி செயல்படுத்தி வருகிறார் என்று அமைச்சர் எ.வ. வேலு, உத்திரமேரூரில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.**



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் பெரு நகரில் நடைபெற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாநலத்திட்ட உதவிகள் வழங்கல் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். இக் கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி. உள்பட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

ஒன்றிய அரசிடம் நாம் பணம் கேட்கிறோம். டெல்லியில் இருக்கிறவர்கள் பணம் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். தற்போது எம்.எல்.ஏ. க்கள் எல்லாம் என்ன பேசுகிறார்கள் என்றால், தமிழ்நாடு தான் இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற மாநிலம். பொருளாதாரத்தில் நாங்கள் தான் அதிகமாக பணம் கொடுகின்ற மாநிலம். ஜி.எஸ்.டி.என்கிற பெயரிலே மோடி அரசாங்கம் தமிழ்நாட்டில் வசூல் செய்கிறார்கள். அந்தப் பணத்தை அங்கே கொண்டு செல்கிறார்கள். திரும்பப் பணம் கொடுங்கள் என்று கேட்டால் பணம் கொடுக்க அவர்கள் மறுக்கிறார்கள்.

பணம் கொடு, பணம் கொடு என்று கேட்கிறோம். சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாட்டின் நிதி நிலை அறிந்து ஒன்றிய அரசே நாங்கள் கொடுக்கின்ற ஜி.எஸ்.டி.யாக கொடுத்த பணத்தை திருப்பிக் கொடு என்று கேட்கிறார்கள். ஆனால் கொடுக்க மறுக்கிறார்கள்.

### ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு!

இந்த ஊரில் 100 ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் நமக்கு திருப்பிக் கொடுப்பது 29 ரூபாய் கொடுகிறார்கள். ஆனால் பீகாரில் அவர்கள் வசூல் செய்வது ஒரு ரூபாய் என்று சொன்னால் அவர்கள் திருப்பிக் கொடுப்பது 7 ரூபாய் கொடுக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்தில் ஒரு ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு திருப்பிக் கொடுப்பது 2 ரூபாய் 76 பைசா கொடுக்கிறார்கள். அசாமில் ஒரு ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்று சொன்னால் அந்த அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுப்பது இரண்டு ரூபாய் 63 பைசா கொடுக்கிறார்கள்.

பா.ஜ.க.ஆளுகின்ற மத்தியபிரதேசத்தில் ஒரு ரூபாய் வாங்குகிறார்கள் என்றால் திருப்பிக் கொடுப்பது இரண்டு ரூபாய் 42 பைசா கொடுக்கிறார்கள். இதனை யோசித்துப் பாருங்கள். ஆக ஒரு ரூபாய் வசூல் செய்கிறார்கள் திருப்பிக் கொடுக்கின்ற போது 2, 3, 6, 7 என்று கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் நம்மிடத்தில் ஒரு ரூபாய் வசூல் செய்தால் அவர்கள் திருப்பிக் கொடுப்பது 29 பைசா கொடுக்கிறார்கள். ஒரு கண்ணில் வெண்ணையும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போல் இருக்கிறது என்று நாங்கள் கேள்வி கேட்டால், எங்களை இ.டி. என்கிற பெயரிலும், இன்கம் டாக்ஸ் என்ற பெயரிலும் மிரட்டிப் பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் பயந்தவன் தமிழ்நாட்டுத் தமிழன் இல்லை. நாங்கள் மிசாவையே பார்த்தவர்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டு முதலமைச்சர் அருமை அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிசாவையே பார்த்தவர். இதைப் பற்றி கவலைப் படமாட்டார்.

### தொகுதி சீரமைப்பு!

இன்னொரு பக்கம், தொகுதி மறு சீரமைப்பு மக்கள் தொகை அடிப் படையில் நாங்கள் தொகுதியை மறு சீரமைக்கப்போகிறோம். தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற உறுப்பினர். எல்லாம் நமது தான். மொத்தம் நமது தான். மகராசன், மகராசிகள் நீங்கள் ஓட்டு போட்டு 39 எம்.பி.க்களும் நாம் தான். அவர்கள் ஜீரோ. தொகுதி சீரமைப்பு என்பது வேறு ஒன்றும் இல்லை. மக்கள் தொகை அடிப்படையில் நாங்கள் தொகுதியை மறு சீரமைக்கப் போகிறோம். என்ன சீரமைக்கப் போகிறார்கள்? என்றால் மக்களை எல்லாம் கூட்டிப் பார்த்து இந்தியாவில் ஒரு தொகுதிக்கு இவ்வளவு மக்களை ஒதுக்கி, நாங்கள் தொகுதியை உருவாக்கப் போகிறோம். அப்படி என்று பார்த்தால், நம் நிலைமை என்ன வென்றால். இப்போது 39 என்றால், இந்த தொகுதி சீரமைப்பு வந்தால் எட்டு குறைந்து 31 ஆக மாறிவிடும்.

இதனை தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன கேட்கிறார்? ஏற்கனவே நாங்கள் 39 இருக்கிறோமே. அந்த 39 தானே இருக்க வேண்டும். அது தானே நியாயம், எங்களை ஏன் குறைக்கிறீர்கள்? என்று கேட்கிறார். அதற்கு அவர்கள் இல்லை, நாங்கள் ஜனத்தொகை அடிப்படையில் தான் போடப்போகிறோம். உங்கள் ஊரில் ஜனத்தொகை குறைந்து போய் விட்டது. மக்கள் எண்ணிக்கை குறைந்து போய்விட்டது. அதனால் மக்கள் எண்ணிக்கை குறைந்து போய் விட்டதால் நாங்கள் தொகுதியைக் குறைக்கிறோம்.

நாம் என்ன கேட்கிறோம் நமது முதலமைச்சர், எம்.எல்.ஏ.க்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், இந்தத் தொகுதி மக்கள் குறைந்து போனதற்கு நாங்களா காரணம். அன்றைக்கு டெல்லியில் இந்திரா காந்தி அம்மையார் இருந்தார். அவர்கள் தான் சொன்னார்கள். மக்களை குறைத்து விடுங்கள் மக்களை குறைத்து விடுங்கள். மக்களை குறைக்க வில்லை என்றால் ஏழைகள் இறந்து விடுவார்கள். உணவுப் பஞ்சம் வந்து விடும். நாடு உருப்படாது, நாடு வளர்ச்சியடையாது. மக்கள் பெருக பெருக நாடு பசிப் பட்டினியாக ஆகிவிடும். எனவே மக்களை குறையுங்கள் என்றார்கள்.

### இது நியாயம்தானா?

டெல்லியில் சொல்லி விட்டார்கள். தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர், அவருக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியதே இல்லை, விளம்பரம் போட்டார்கள். என்ன போட்டார்கள்? நாம் இருவர் நமக்கு இருவர். அதற்கு முன்பெல்லாம் ஐந்தாறு பேர். உன்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று கேட்டால். ஐந்து பேர் அண்ணன் தம்பிகள், சிலபேர் ஒன்பது பேர் என்பார்கள். ஞானசேகரன் கூட பிறந்தவர்கள் ஒன்பது பேராம். அப்போதெல்லாம் ஒன்பது, பத்து பேர் தான். கலைஞர் முதலமைச்சராக இருந்த போது சொன்னார், நாம் இருவர், நமக்கு இருவர் என்று. ஒரு வருடம் ஆகி விட்டது. அடுத்து ஒரு விளம்பரம் வந்து, நாம் இருவர் நமக்கு ஒருவர் என்று வந்தது.

குடும்பக்கட்டுப்பாடு அரிசி, பணம், புடவை, வேட்டி எல்லாம் கொடுப்பார்கள். ஜனத்தொகை குறைந்ததாகி விட்டது. ஜனத்தொகை குறைய காரணம் ஒன்றிய அரசு தானே. எங்களை குடும்பக்கட்டுப்பாடு என்று ஜனத்தொகையை குறைக்கச் சொல்லி விட்டு இப்போது ஜனத்தொகை குறைந்து விட்டது தொகுதியைக் குறைக்கிறோம் என்று சொல்கிறார்களே, இது நியாயந்தானா.?

அதனைத்தான் கேட்கிறார் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். இந்தக் கேள்விகளை எல்லாம் இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்டோம். இந்தத் தொகுதி சீரமைப்பெல்லாம் 25 ஆண்டுகாலத்திற்கு தமிழ்நாட்டில் அப்படியே நீடிக்கும் என்று சொன்னார். அதற்கடுத்து 25 ஆண்டு காலம் வந்தது. அற்புதமான மனிதர் வாஜ்பாய். அவரிடத்தில் கலைஞர் கேட்டார், எங்கள் தமிழ்நாட்டு மக்கள் என் பேச்சைக் கேட்டு ஜனத்தொகை குறைந்து விட்டது, அந்தத் தொகுதிகள் அப்படியே இருக்கட்டும் என்று கூறினார். அந்தத் தொகுதிகள் 25 ஆண்டுகாலம் அப்படியே தான் இருக்கிறது. இன்றைக்கு ஜனத்தொகை குறைந்து இருக்கிறது. அதனால் கேட்கிறார் இன்றைக்கு முதலமைச்சர் எந்த இந்திரா காந்தி கடைபிடித்தாரோ, எந்த வாஜ்பாய் கடைபிடித்தாரோ அதைப் போல இன்றைக்கு இந்தியாவின் பிரதமராக இருக்கின்ற மோடி அவர்களும் 25 ஆண்டு காலத்திற்கு தொகுதி மறு சீரமைப்பை தள்ளிப் போடுங்கள் என்று கேட்கிறார்.

பிரதமர், வாய் திறக்கிறாரா. இல்லை. அதனை செய்யப்போகிறோம் என்றோ செய்யமாட்டோம் என்றோ சொல்ல மாட்டேன் என்றார்.

### தேசிய கல்விக் கொள்கை தேவையில்லை!

இந்த தேசிய கல்விக் கொள்கை வந்தால் 5ஆம் வகுப்பில் ஒரு பரீட்சை வைப்பார்கள். நமது பசங்க ஐந்தாவது பைல் ஆனால், ஐந்தாவதிலே பெயில் ஆகி விட்டால் போய் மாடு மேய் என்ற அனுப்பி விடுவார்கள். சரி அதில் தேறிவிடுகிறோம். அடுத்து எட்டாம் வகுப்பில் பரீட்சை. எட்டாவது பரீட்சை எழுதி பாஸ் ஆகிவிட்டால் பரவாயில்லை. பெயில் ஆகிவிட்டால் என்ன செய்வது. நாமே சொல்வோம். எட்டாவதிலே பைல் ஆகிவிட்டாய். வீட்டில் இருக்கும் வேலையைப் பாரு என்று சொல்வோம்.

அடுத்து பத்தாம் வகுப்பு, இதற்காகத்தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் சொல்கிறார், ஐந்தாம் வகுப்பு பரீட்சை தேவையில்லை. எட்டாம் வகுப்பு பரீட்சை தேவையில்லை. எப்போதும் இருப்பது போன்று பத்தாம் வகுப்பும், ப்ளஸ் டூவிலும் தேர்வு இருந்தால் தான் நம் வீட்டுப் பிள்ளைகள் படிக்கும். அதுதான் எங்களுக்குத்தேவை, தேசியக் கல்விக் கொள்கை எங்களுக்குத் தேவையில்லை என்று.

அடுத்து மூன்றாவதாக ஒரு மொழியைப் படிக்க வேண்டும் என்கிறார்கள். என்ன மொழி, இந்தி. இன்றைக்கு என் தம்பியெல்லாம் ஆங்கிலத்தை படித்ததால் தான் இன்றைக்கு அமெரிக்காவில் போய் கை நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஜப்பான், ஜெர்மனுக்குப் போகிறார்கள். என்ன படிச்சே என்றால் இன்ஜினியரிங் படிச்சேன் என்கிறார்கள். எந்தக் காலேஜ் என்றால் திருவண்ணாமலை அருணை இன்ஜினியரிங் காலேஜ் என்கிறார்கள். வேலூர் வி.ஐ.டி. காலேஜ் என்கிறார்கள். மீனாட்சி என்று இருக்கின்ற காலேஜ் பெயர்களையெல்லாம் சொல்கிறார்கள். இப்படி ஜெர்மனியிலும், ஜப்பானிலும் அமெரிக்காவிலே என்று இன்றைக்கு டாலர் கணக்கில் வாங்குகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் படித்தது ஆங்கிலம்.

### இருமொழிக் கொள்கைதான் எங்கள் உயிர் மூச்சு!

அதனால் தான் அண்ணா சொன்னார். நம் தாய்மொழியான தமிழை நாம் படிக்க வேண்டும். இணைப்பு மொழியாக வெளியே போக வேண்டும் என்று சொன்னால் ஆங்கிலம் இருந்தால் போதும், அதுதான் இரு மொழிக் கொள்கை என்று அண்ணா கொண்டு வந்தார். அதனைத் தான் நமது முதல்வர் இரு மொழிக்கொள்கையைக் கடைபிடிக்கிறார். இரு மொழிக்கொள்கை தான் எங்கள் உயிர் மூச்சு என்று முடிவெடுத்திரு க்கிறார் நமது முதலமைச்சர்.

நான் உங்களைக் கேட்கிறேன். இப்போது இந்தி படிக்கச் சொல்கிறீர்கள். ஒரு வாதத்திற்காகக் கேட்கிறேன். இப்போது நீங்கள் ஆளுகின்ற பீகாரில் இந்தி படிக்கிறார்கள். உத்திரப்பிரதேசத்தில் இந்தி படிக்கிறார்கள். அரியனாவில் இந்தி படிக்கிறார்கள். மத்தியப்பிரதேசத்தில் இந்தி படிக்கிறார்கள். எல்லோரும் இந்தி படிக்கிறார்கள். நீங்கள் சிங்கப்பூருக்கோ, மலேசியாவிற்கு, ஜெர்மனிக்கோ அங்கே போனால், அங்கே ஒருவர் ஆங்கிலம் பேசுகிறார்கள் என்று சொன்னால், இந்தியன் என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் யாராக இருப்பார்கள் என்று சொன்னால் தமிழ்நாட்டுக்காரராகத்தான் இருப்பார். அங்கே யாரும் இந்திக்காரர்கள் இருக்க மாட்டார்கள். ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

சரி இந்தி படிக்கிறார்கள். பீகாரில், மகாராஷ்டிராவில் இந்தி படிக்கிறார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றால் அமெரிக்காவில் இல்லை. ஜெர்மனியில் இல்லை. எங்கே இருக்கிறார்கள் என்றால் தமிழ்நாட்டில் ஓ.எம்.ஆர். ரோட்டில் கொளத்து வேலை, கார்ப்பெண்டர் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் டோல்கேட்டில் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். கார்பெண்டராக இருக்கிறார்கள் என்று இருக்கின்ற வேலையை செய்கிறார்களே தவிர, ஆக இந்தி படித்தவர்களின் நிலை இப்படி. தமிழ்நாட்டில் ஆங்கிலம் படித்தவர்களின் நிலை அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும், ஜெர்மனிக்கும்போய் இன்றைக்கு இந்தியாவின் பொருளாதாரத்தை வெளிநாட்டு டாலர் கணக்கில் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது தமிழன்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

### பொருளாதார வளர்ச்சியின் தமிழ்நாடு முதலிடம்!

இன்னும் சொல்லப்போனால் இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலத்திலும் இன்றைக்கு பொருளாதார வளர்ச்சியிலே முதல் மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது இரு மொழிக் கொள்கை தான் காரணம். இரு மொழிக் கொள்கையில் படித்த காரணத்தினால் தான் நாகரீகம் தமிழ்நாட்டில் வளர்ந்திருக்கிறது. இரு மொழிக் கொள்கையை படித்த காரணத்தினால் தான் கை நிறைய சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். இரு மொழிக் கொள்கையை படித்த காரணத்தினால் தான் இன்றைக்கு குடும்பப் பொருளாதாரம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

அதனால் நாங்கள் சொல்கிறோம் இரு மொழிக் கொள்கை வேண்டும் என்று. இந்தி வேண்டாம். இந்தி வேண்டும் என்றால் நீ கொளத்து வேலைக்குத் தான் போக முடியும், சென்ட்டிரிங் வேலைக்குத் தான் போக முடியும். இதுவும் கிடைக்கவில்லை என்றால் டோல்கேட்டில் தான் பணம் வசூல் செய்ய வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். இதில் என்ன தப்பு யோசித்துப் பாருங்கள்.

அதனால் தான் நமது தமிழ்நாட்டின் முதலமைச்சர் சொல்கிறார். நமது உயிர் மூச்சான இரு மொழிக் கொள்கை என்று. ஒன்று தாய் மொழியான தமிழ். இன்னொன்று இணைப்பு மொழியான ஆங்கிலம் என்று அழுத்தமாகச் சொல்கிறார். அப்படிப்பட்ட முதலமைச்சர் தமிழ்நாட்டை ஆண்டுக் கொண்டு இருப்பதன் காரணத்தினால் தான் நாம் நினைப்பதெல்லாம் நடக்கிறது. நாம் எண்ணுவதெல்லாம் நடக்கிறது. நமது குடும்பப் பொருளாதாரம் முன்னேறுகிறது. அப்படிப்பட்ட தமிழ்நாட்டு முதலமைச்சர் 72 வயது மட்டும் போதாது அவர் நூறாண்டு காலம் இந்தத் தமிழ்நாட்டிற்காக வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், அண்ணல் அம்பேத்கரின் 135வது பிறந்த நாள் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட நான்கு இடங்களில் சமத்துவ நாளாகக் கொண்டாடப்பட்டு, 1,500 பேருக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் மற்றும் சமத்துவ திருநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி, 74 வது வார்டு சந்திர யோகி சமாதி சாலை மற்றும் கிருஷ்ண தாஸ் பிரதான சாலை புதிய வாழைமா நகர் ஆகிய இடங்களில் மேயர் பிரியா ராஜன் தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அப்பகுதி மக்களுக்கு அறுசுவை மதிய உணவு மற்றும் சிலம்பாட்ட குழுவிற்கு சிலம்ப பயிற்சிக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார். இதில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, தமிழன் பிரசன்னா, செ.தமிழ்வேந்தன், பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், மா. ருத்ரமூர்த்தி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! வி.பி.கலைராஜன் முன்னிலை! ச.சண்முகநாதன் வரவேற்புரை!

# நந்தனம் ச.நம்பிராஜனின் ‘தளபதி 72 கவிதை மலர்’ நூல்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் - கோவி.செழியன் வெளியிட்டு சிறப்புரை!

சென்னை, ஏப்.15

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் ச.நம்பிராசனின் ‘தளபதி 72 கவிதை மலர்’ நூல் வெளியீடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 21.4.2025 - திங்கள் கிழமை மாலை 6.30 மணியளவில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மாநில கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் முன்னிலை வகிக்கிறார். சென்னை தென் மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கவிதை மலர் நூலை வெளியிட்டு அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், ஈரோடு இறைவன், மு.தென்னவன், நா.செந்தில், தஞ்சை கூத்தரசன், எஸ்.வெங்கடாசலம், நா.சந்திரபாபு, க.சேவுகப் பெருமாள், ஆடுதுறை உத்திராபதி, பெருநாழிபோஸ், நேரு பாண்டியன், கே.எஸ். எம்.நாதன், ஆர்.தசரதன், பிரம்மபுரம் பழனி, அ.திராவிடமணி, ஆர்.ஸ்ரீதர், நாகநாதன், சௌமியன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே. ஏழுமலை எம்.சி., நந்தனம் கி.மதி எம்.சி, எஸ்.முரளி, விஜய் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். ஏ.செந்தில், ஏ.சதீஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

முன்னதாக 21.4.2025 - திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் மயிலாப்பூர் சாந்தோம் காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் அனைவருக்கும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதிய உணவு வழங்கப்படுகிறது.

## நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# இல்லம் தோறும் மாணவர் அணி சேர்க்கை முகாம்!

## அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் – இரா.ஆவுடையப்பன் பங்கேற்பு!

நெல்லை, ஏப். 15 -

நெல்லை கிழக்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் இல்லம் தோறும் மாணவரணி சேர்க்கை முகாம் வள்ளியூர் விஜயா மஹால் மற்றும் பணகுடியில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார்.இதில் 200 மாணவர்கள் பங்கேற்றனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என். நேரு

மாநில மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ் காந்தி ஆகியோர் அறிவுறுத்தலின் படி நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் இல்லம் தோறும் மாணவர்கள் சேர்க்கை முகாம் வள்ளியூர் விஜயா மஹாலில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முகாமை துவக்கி வைத்து மாணவர்களை வரவேற்றார்.



டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்.கே. பேட்டை கிழக்கு ஒன்றியம் வங்கனூரில் உள்ள அண்ணல் அம்பேத்கர் திருஉருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றனர். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.பழனி, சி.என்.சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி மாணவர் அணி சார்பில் பகுதி அமைப்பாளர் எஸ்.ஜி.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் பொதுமக்களின் தாகம் தீர்த்திட நீர் மோர் பந்தல் திறப்பு விழா 147 வது வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலையில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார். இதில் 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.